(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) தீவுத் திடலில் நிலையான பொருட்காட்சி அமைப்பதற்கு 1981-82 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அடையாள ஒதுக்கீடு (Token Provision) ரூ. 1,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்தச் செலவு மற்றும் திட்ட விவரங்களை அரசுக்கு அளிக்குமாறு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, நிரந்தரமான பொருட்காட்சி அமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். 1978 ஆம் ஆண்டு தீவுத் திடலில் நடைபெற்ற பொருட்காட்சியில் மின்சார வேலைகள் சம்பந்தமாக காண்ட்ராக்டுக்கு கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு? 1981 ஆம் ஆண்டு அதாவது இப்போது நடந்து முடிந்ததே அந்தப் பொருட்கட்சிசாலையில் மின்சார வேலைக்கான காண்ட்ராக்டுக்கு கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற கேள்வி தீவுத் திடலில் நிரந்தரமான பொருட்காட்சி அமைப்பது பற்றியது. அதற்கான தகவலைச் சேகரித்து விடையளித்திருக்கிறேன். வேறு விவரங்களை அவர்கள் பெற வேண்டும் என்றால் அதற்கு தனியாகக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிளவக்கல் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்குதல்.

*வினா எண். 531—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் வட்டம் வத்திராயிருப்பு பிர்க்காவிலுள்ள பிளவக்கல் அணைப் பகுதியை சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) மேற்படி செயற்குறிப்பின் முழு விவ்ரம் என்ன ?

(இ) மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வருகிறது ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ), (ஆ) மற்றும் (இ) : திருவில்லிப்புத்தூர் வட்டம், வத்திராயிருப்பு பிர்க்காவிலுள்ள பிளவக்கல் அணைப்பகுதியை இராமநாதபுரம் மாவட்ட உலாத் தலமாக மாற்றுவதற்கு அரசு போக்குவரத்துத் துறையில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியாளர் இந்த பிளவக்கல் அணைப் பகுதியை மாவட்ட உலாத்தலமாக மாற்றுவதற்கான திட்ட அறிக்கையை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளார். அவரது அறிக்கையின் மீது மாநிலக் குழுவின் (State Level Committee) பரிந்துரைகளைப் பெற்று, தக்க நடவடிக்கைகளுக்காக ஆணை பிறகு பிறப்பிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களின் மூலமாகத்தான் இது மாவட்ட டூரிஸ்ட் சென்டராக ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்காக அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிளவக்கல் அணைக்கட்டில் பேச்சிக்கனி என்ற ஒரு இடம் இருக்கின்றது. அங்கே தேக்கடி போன்று யானைக் கூட்டங்களும், கருமந்திக் கூட்டங்களும், மான் கூட்டங்களும், புலிக் கூட்டங்களும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, அந்த இடத்தில் படகு விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தமிழகத்திலே கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்ற அற்புதமான சுற்றுலாப் பகுதிகளில் இயற்கைக் காட்சிகள் நிறைந்த பகுதிகளிலே ஒன்று இந்த பிளவக்கல் அணைக்கட்டுப் பகுதியாகும். அங்கே உள்ள மலைத் தொட்டில் போன்ற இடத்திலே மூன்று அணைகள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. அந்த அற்புதமான அணைகளுக்குள்ளே நாம் படகிலே சென்றால் தேக்கடியில் காண்பது போன்று மிருகங்களை இருபுறமும் காணுகின்ற வாய்ப்பு நம்முடைய எல்லைக்குள்ளேயே இருக்கின்றது. ஆகவே அதை மிகச் சிறந்த சுற்றுலாத்தலமாக ஆக்க வேண்டும் என்று அரசு இப்போது முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகின்றது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகிற போதே அது இயற்கைச் சூழ்நிலை உள்ள அற்புதமான இடமாக இருக்கின்றது என்று கூறினார்கள். அப்படி இருந்தும் அதை ஏன் மாவட்ட டூரிஸ்ட் சென்டராக ஆக்க வேண்டும், இந்திய அளவில் ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டராக ஏன் அதை ஆக்கக் கூடாது?

அந்த இடத்தில் * * * *

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் இவ்வாறு குற்றச்சாட்டுகள் சொல்லக்கூடாது. ஆகவே, இதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, அந்த இடத்தை மாநில டூரிஸ்ட் சென்டராக ஆக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, அதை மாநில அளவிலே உள்ள ஒரு சுற்றுலா தலமாக ஆக்க வேண்டும் என்பதுதான் அரசின் விருப்பம். ஆனால் பொருளாதார சூழ்நிலையை மனதிலே கொண்டு அது மாவட்ட சுற்றுலாத் தலமாக உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு அதை மாநில சுற்றுலாத்தலமாக ஆக்குவதற்கு இன்னும் சொல்லப் போனால் குற்றாலத்திற்குப் போகிற வழியிலே அது இருப்பதால் அதை இந்திய சுற்றுலாத்தலமாகக் கூட ஆக்குவதற்குரிய வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே, அதைப்பற்றி பின்னாலே நாம் பரிசீலிக்க முடியும்.

அரசு விவசாய பண்ணைகளில் பணிபுரியும் விவசாயத் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம்.

*வினா எண். 532— திரு ர. கிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரசு விவசாயப் பண்ணைகளில் அரசின் ஆணைப்படி விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் வழங்கப்படாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆணை பிறப்பித்த நாளிலிருந்து பணியாற்றியவர்களுக்கு சம்பள பாக்கி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தமிழ்நாட்டிலுள்ள அரசு விவசாயப் பண்ணைகளில் அரசின் ஆணைப்படி விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.